தரம் - 10



# தமிழ்மொழியும் இலக்கியமும்

அலகு -1.0

நீதிப்பாடல்கள்

**Mr .A. SENTHILKUMAR (B.A)**
**K/Kathiresen Nationalonal School,**
**Nawalapitiya.**

| | | |
|---|---|---|
| பாடம் | - | தமிழ்மொழியும் இலக்கியமும் |
| தரம் | - | 10 |
| அலகு | - | 1.0 நீதிப்பாடல்கள் |
| உப அலகு | - | 1.3 வாக்குண்டாம் |

## உள்ளடக்கம்

- நீதிப்பாடல் என்பது பற்றி..
- செய்யுள் ஆசிரியர்....
- இவரது ஏனைய படைப்புகள்
- செய்யுள் விளக்கம்..
- அரும்பத விளக்கம்
- கொண்டு கூட்டி வாசித்தல்
- பாடல் வெளிப்படுத்தும் செய்தி
- மதிப்பீட்டு வினாக்கள்

## நீதிப்பாடல் என்பது

மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்கான சீரிய நற்கருத்துக்களை போதிக்கின்ற பாடல்கள் அனைத்தும் நீதிப்பாடல்கள் ஆகும்.

# செய்யுளின் ஆசிரியர்



செய்யுளின் ஆசிரியர் ஔவையார் ஆவார்.
இவர் ஒரு பெண்பாற் புலவர்.
இப் பெயர் கொண்ட புலவர்கள் பலர் இருந்ததாக கூறப்படுகிறது.
நூலமைதி, தழிம்நடை என்பவற்றின் அடிப்படையில் நோக்கும் போது இவர்கள் பல்வேறு காலகட்டத்தவர்கள் என்பதை நோக்க முடியும்.
சங்க காலம் மற்றும் சோழர் காலங்களில் இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.
இவர் கூறுகின்ற வாழ்க்கை நெறி சிறுவர் முதல் முதியோர் வரை அறிந்துக்கொள்ளக் கூடிய வகையில் உள்ளது.

## இவரது ஏனைய படைப்புகள்

- ஆத்திச்சூடி
- கொன்றைவேந்தன்
- மூதுரை
- நல்வழி
- அசதிக்கோவை
- ஞானக்குறள்
- விநாயகர் அகவல்

## செய்யுள் விளக்கம்..

### அடக்கமுடையார் சிறப்பு

அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்
ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

## பதவுரை

| | |
|---|---|
| கொக்கு | - கொக்கானது |
| மடைத்தலையில் | - நீர் ஓடும் வாய்க்காலில் |
| ஓடு மீன் ஓட | - சிறிய மீன்களை எல்லாம் ஓடவிட்டு |
| உறுமீன் | - பெரிய மீன் |
| வருமளவும் | - வரும் வரையில் |
| வாடி இருக்குமாம் | - பொறுமையாக இருக்கும் |
| அடக்கம் உடையார் | - அடங்கி இருப்பவரை |
| அறிவிலார் | - அறிவற்றவர் |
| என்று எண்ணிக் | - என்று நினைத்து |
| கடக்கக் | - வெல்வதற்கு |
| கருதவும் வேண்டாம் | - நினைக்க வேண்டாம் |

## கொண்டு கூட்டி வாசித்தல்

கொக்கு மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம். அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டாம்.

## செய்யுளின் பொருள்

கொக்கானது நீர் ஓடும் வாய்க்காலில் சிறிய மீன்களை விட்டு விட்டு தன் உணவுக்கு ஏற்ற பெரிய மீன் வரும் வரையில் பொறுமையாக இருக்கும். அது போல தனக்கு பொருத்தமான நேரம் வரும் வரை அடங்கி இருப்பவரை அறிவற்றவர் என்று நினைத்து அவரை வெல்வதற்கு நினைக்க வேண்டாம்.

## பாடல் வெளிப்படுத்தும் நீதிக்கருத்து

பொறுமையாக இருப்பவர்களை அறிவற்றவர்கள் எனக்கருதி வெல்வதற்கு நினைக்க கூடாது. என்றும் அவர்கள் உரிய சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கிறார்கள் என்று பொருள்.

## இந்நூலுக்கு வாக்குண்டாம் எனப் பெயர்வரக் காரணம் யாது?

இந்நூலின் காப்புச் செய்யுள் வாக்குண்டாம்.....எனத் தொடங்குவதால் வாக்குண்டாம் எனப் பெயர் வரலாயிற்று

இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியாது ?

**உவமை அணி**

**சிறிய மீன்களை எல்லாம் ஓடவிட்டு பெரிய மீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கு போல**

| | |
|---|---|
| **உவமானம்** | **- கொக்கு** |
| **உவமேயம்** | **- அடக்கமுடையார்** |
| **பொதுத்தன்மை** | **- பொறுமையுடன் காத்திருத்தல்** |

# “வாழிய செந்தமிழ்”

## தொடர்புபடுத்துக

| | | |
|---|---|---|
| 1. | இப் பாடல் இடம்பெறும் நூல் எது? | சோழர் காலம் |
| 2. | இப் பாடலைப் பாடியவர் யார்? | காத்திருத்தல் |
| 3. | இந்நூலுக்கு வழங்கப்பட்டுள்ள மற்றொரு பெயர் யாது? | வாக்குண்டாம் |
| 4. | இவர் எழுதிய ஏனைய நூல்களில் ஒன்று. | ஔவையார் |
| 5. | இச்செய்யுளின் ஆசிரியர் வாழ்ந்த காலப்பகுதி யாது ? | மூதுரை |

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

1. **மடைத்தலை என்ற சொல்லின் பொருள்**

   1.குளம் 2. குடல் 3. வாய்க்கால் 4. நதி

2. **உறுமீன் என்பதில் “உறு” என்பது**

   1. பெயர்ச்சொல் 2.வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல்

3. **வாடியிருக்குமாம் கொக்கு என்ற வாக்கியத்தின் எழுவாய்**

   1. வாடுதல் 2. இருத்தல் 3. கொக்கு 4. வாடி

4. **அறிவுடைமை என்பதன் எதிர்ப்பதம்**

   1. ஞானம் 2. உடைமை 3. இல்லாமை 4. அறியாமை

5. **ஓடுமீன் என்பது…**

   1.வினைச்சொல் 2.பெயர்ச்சொல்
   3.வினைத்தொகை 4.உவமைத்தொகை

சுருக்க விடை தருக

1. அடக்கமுடையாரின் இயல்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது ?
2. கொக்கின் இயல்பு யாது?
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?
4. இச்செய்யுளில் உரிச்சொல் எப்பொருளில் வந்துள்ளது ?
5. இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள வினையெச்சம் ஒன்று தருக

# சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.

1. ஔவையின் செய்யுள்கள் மிக கடினமானவை. - ( சரி / பிழை )
2. ஔவையாரால் இயற்றப்பட்ட இலக்கியங்களில் ஒன்று அசதிக்கோவையாகும். - ( சரி / பிழை )
3. இவர் பாணன் குடியில் பிறந்தவர் ஆவார். - ( சரி / பிழை )
4. பொறுமையோடு காத்திருந்தால் வெற்றி பெற முடியாது. - ( சரி / பிழை )
5. 'ஔவையின் வாக்கு அமுதவாக்கு' என்ற பழமொழியுண்டு. - ( சரி / பிழை)

பின்வரும் சொற்களில் உள்ள எழுத்துப் பிழைகளை இனங்காண்க

1. மடைத்தலையிள் - ………………..
2. கறுதவும் - ………………..
3. வேன்டாம் - ………………..
4. வாக்குன்டாம் - ………………..
5. வாடியிறுத்தல் - ………………..
6. ஓளவைக்குரள் - ………………..
7. அரிவிளார் - ………………..
8. பேறிய - ………………..
9. மீண் - ………………..
10. நீரோடும் - ………………..
11. மூதுறை - ………………..
12. நள்வலி - ………………..

**மேலதிக பயிற்சிகளுக்காக**

tehttps://forms.gle/Cj3DLwEba758qsWdAxt

thttps://forms.gle/dYJszpDKYJBgEVEKAext

# நன்றி

“மொழியின் ஒளியே விழியின் ஒளி”